**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.**

**முன்னிலை: சு. அபூர்வா, பி.ஏ., எல்.எல்.பி.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, பழனி.**

**2025–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 08–ஆம் நாள் திங்கள்கிழமை**

**இ.ம.எண்.2/2023**

**இன்**

**அ.வ.எண்.85/2023**

A. மாமூண்டி

(வாதி தனக்காகவும், பழனி வட்டம் பெத்தநாயக்கன்பட்டி

கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு மாமூண்டி கோவில் 27

பங்காளி குடும்பங்களுக்கு பாத்தியப்பட்ட பெரியகுடும்பத்தார்

என்ற முறையில்) ....மனுதாரர்/வாதி

// எதிர் //

1. T.முருகன்
2. M.பாண்டியன்
3. M.சுப்பிரமணி
4. M. பெரியசாமி
5. P. குரு ....எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனுவானது என் முன்பாக இதுநாள் வரையிலும் இந்த நீதிமன்றத்தின் பரிசீலனையின் கீழ் இருந்து வந்தும் மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர்கள் **திரு.M.மணிக்கண்ணன், B.A.,B.L.,** ஆகியோர் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் **திரு.P.மதியழகன், B.Sc.,B.L.,** அவர்கள் முன்னிலையாகியும்,

இறுதி விசாரணைக்காக 28.08.2025 ஆம் தேதி வந்தபோது, இருதரப்பு வாதங்களையும் கேட்டறிந்தும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்த நீதிமன்றம் வழங்கிடும்,

**உத்தரவு**

மனுச்சொத்தான அருள்மிகு மாமூண்டி திருக்கோவிலுக்கு சுற்றுச்சுவர் அமைப்பதையும் மற்றும் அதன் கட்டுமானப்பணிகளையும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளோ, அவரது வகை ஆட்களோ, ஏஜெண்டுகளோ எந்தவித தடையும், இடைஞ்சலும் செய்யக்கூடாதென மேற்படி அசல் வழக்கு முடியும் வரை மேற்படியார் பேரில் இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்க உத்தரவாக வேண்டி உரிமையியல் நடைமுறை சட்டம் **கட்டளை 39 விதி 1, 2, 3** மற்றும் **பிரிவு 151**–ன் கீழ் மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம் :**

2.1. மனுச்சொத்தானது பழனி வட்டம், பெத்தநாயக்கன்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள 27 குடும்பங்களுக்கு பாத்தியப்பட்ட மாமூண்டி திருக்கோவிலுக்கு பாத்தியப்பட்ட இடமாகும், மேற்படி இடத்திற்கு மாமூண்டி கோவில் பெயரில் பட்டா வழங்கப்பட்டு அதன் சர்வே எண்.154/27 ஆகும் என்றும், மேற்படி கோவிலின் பட்டா இடமானது 3 செண்ட் அளவில் பாத்தியப்பட்டதாகும் என்றும், மேற்படி மாமூண்டி கோவிலுக்கு பாத்தியப்பட்ட மனுச் சொத்தின் தெற்கு பக்கத்தில் இந்த எதிர்மனுதாரர்கள் கும்பிட்டுவரும் அவர்களுடைய குலதெய்வமான ஊமக்காளி கோவில் அமைந்துள்ளது என்றும், மனுதாரரும் அவரது

பங்காளிகள் சேர்ந்து கும்பிட்டு வரும் கோவிலானது சுமார் 100 வருடங்களுக்கு முன்பிருந்தே மனுதாரர்களின் முன்னோர்களால் கும்பிட்டு வந்து மேற்படி கோவிலின் உரிமை இந்த 27 பங்காளிகளுக்கு மட்டுமே பாத்தியப்பட்டதாகும் என்றும் கூறப்பட்டுள்ளது.

2.2. அதனைத் தொடர்ந்து, எதிர்மனுதாரர்களின் குடும்ப குலதெய்வ கோவிலான ஊமக்காளி திருக்கோவில் மேற்படி எதிர்மனுதாரர்களின் குடும்பத்திற்கும், அவரது பங்காளிகளுக்கு பாத்தியப்பட்ட கோவிலாகும் என்றும், மனுதாரரும் அவரது பங்காளிகளும் மற்றும் எதிர்மனுதாரர்களும் மாமன் மச்சான் உறவுகொண்டவர்கள் ஆவார்கள் என்றும், மனுதாரருடைய குலதெய்வ கோவில் பல வருடங்களாக கும்பிட்டுவந்து ஆரம்பத்தில் ஒரு ஓட்டுவில்லை வீட்டிற்குள் வைத்து சாமி கும்பிட்டுவந்து வருடத்திற்கு ஒருமுறை மாசி மாதத்தில் பங்காளிகள் அனைவரும் ஒன்றுகூடி விழா எடுத்து சாமி கும்பிட்டுவருவது வழக்கமாக இருந்து வருகிறது என்றும், மனுச் சொத்தின் அருகில் தெற்குப் பக்கம் அமைந்துள்ள இந்த எதிர்மனுதாரர்களுக்கும், அவரது பங்காளிகளுக்கும் பாத்தியப்பட்ட ஊமக்காளி கோவில் தற்போது புதிதாக கோவில்கட்ட கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்றும், மனுதாரருடைய பங்காளிகளுக்கு பாத்தியப்பட்ட மாமூண்டி திருக்கோவிலை சுற்றி காம்பவுண்டு சுவர் அமைப்பதில் தான் பிரச்சனை ஏற்பட்டுவருகிறது என்றும், மனுதாரரும் அவரது பங்காளிகளும் சேர்ந்து பல ஆயிரங்கள் செலவு செய்து கோவில் கட்டி தற்போது இரண்டாவது முறையாக 09.02.2023 ஆம் தேதி கும்பாபிஷேகம் செய்து முடித்து இருந்து வந்தார்கள் என்றும், மனுதாரருடைய குலதெய்வ பெயரில் உள்ள

பட்டா நிலத்திற்கு உட்பட்ட நிலமான மனுச் சொத்தை சுற்றி குறிப்பிட்ட நான்கு மாலுக்குள் சுற்றுச்சுவார் அமைப்பதற்காக மனுதாரரும், அவரது பங்காளிகளும் சேர்ந்து கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு முடிவு செய்து அதன் பேச்சுவார்த்தையில் போய்க்கொண்டிருந்தபோது எதிர்மனுதாரர்கள் அதன்விபரம் அறிந்து மனுச்சொத்தில் கோவிலை சுற்றி எந்தவித காம்பவுண்டு சுவர்களும் எழுப்பக்கூடாது என்று ஆட்சேபணை செய்தார்கள் என்றும், மனுதாரர் அவரது குடும்ப குலதெய்வத்திற்கு பாத்தியப்பட்ட பட்டா இடத்தில் தான் காம்பவுண்டு சுவர் எழுப்ப அதற்கான நடவடிக்கை எடுத்து வருகிறார் என்றும், இதில் எதிர்மனுதாரர்கள் ஆட்சேபணை செய்ய யாதொரு ஆட்சேபணையும் இருக்கமுடியாது என்றும், ஏனென்றால் மனுதாரருடைய குலதெய்வம் வேறு என்றும் எதிர்மனுதாரர்களின் குலதெய்வம் வேறு என்றும், மேற்படி இரு கோவில் இடத்திற்கும் தனித்தனியே பட்டா இருந்து வருகிறது என்றும் கூறப்பட்டுள்ளது.

2.3. அதனைத் தொடர்ந்து, எதிர்மனுதாரர்கள் மனுதாரருடைய குலதெய்வ கோவிலின் சுற்றுச்சுவர் அமைப்பதை தடுத்துநிறுத்தவும், அதனை ஆட்சேபிக்கவும் எந்தவித உரிமையும் கிடையாது என்றும், மனுதாரரும், அவரது குலதெய்வ கோவிலுக்கும் எந்தவித பாதிப்பும் கிடையாது என்றும், மனுதாரருடைய குலதெய்வ கோவிலுக்கும் மற்றும் எதிர்மனுதாரின் குலதெய்வ கோவிலுக்கு செல்வதற்காக தனிப்பட்ட முறையில் பாதையும் இருந்து வருகிறது என்றும், சென்ற 05.09.2023 ஆம் தேதி மனுதாரரும், அவரது பங்காளிகளும் சேர்ந்து கோவில் சுற்றுச்சுவர் அமைப்பதற்காக செங்கள்கல் இறக்குவதற்காக கோவில்

வாசல் முன்பு வந்திருந்தபோது இந்த எதிர்மனுதாரர்கள் அனைவரும் ஒன்றுகூடி சுற்றுச் சுவர் கட்டக்கூடாது என்றும், அதற்கான எந்தவித தளவாடச்சாமான்களும் இறக்கக்கூடாது என்று ஆட்சேபணை செய்து பிரச்சனை செய்துவந்ததால் மனுதாரரும், அவரது பங்காளிகளும் கோவில்காரியம் சண்டை சச்சரவுகளுடன் மற்றும் கருத்துமோதல்களுடன் வேலை செய்யக்கூடாது என்றும் முடிவு செய்து கட்டுமாணப்பணிகளுக்கு வந்த சாமான்களை அதே வாகனத்தில் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டுவிட்டது என்றும் கூறப்பட்டது.

2.4. அதனைத் தொடர்ந்து, இவ்வழக்கில் முதன்மைநிலை வழக்கும் சமநிலை வாய்ப்பும் மனுதாரர் பக்கமே உள்ளது என்றும், மனுச்சொத்தான அருள்மிக மாமுண்டி திருக்கோவிலுக்கு சுற்றுச்சுவர் அமைப்பதையும் மற்றும் அதன் கட்டுமானப்பணிகளையும் எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகளோ, அவரது வகை ஆட்களோ, ஏஜெண்டுகளோ எந்தவித தடையும், இடைஞ்சலும் செய்யக்கூடாதென மேற்படி அசல் வழக்கு முடியும் வரை எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிருரையின் சுருக்கம் :**

3.1. மனுதாரரின் மனுவில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் பொய்யும் பிரட்டும், மோசடியுமானவைகள் ஆகும் என்றும், எதிர்மனுதாரர்களால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகள் மறுக்கப்படுகின்றன என்றும், அவைகளை உரிய சான்றுகள் மற்றும் சாட்சிகள் வாயிலான நிரூபிக்க மனுதாரர் கடமைப்பட்டுள்ளார் என்றும்,

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் சேர்ந்து வழக்கு நத்தம் புறம்போக்கு இடத்தில் ஊமக்காளி கோவில் மற்றும் மாமூண்டி கோவில் ஆகியவற்றை 100 வருடங்களுடக்கு முன்பிருந்தே வழிபட்டு வந்துள்ளார்கள் என்றும், மேற்படி இரண்டு கோவில்கள் இருப்பதை மறைத்தும் மற்றும் ஆக்கிரமிப்பு செய்ய வேண்டும் என்ற கெட்ட உள்நோக்கத்துடனும், மேற்படி மனுவை இந்த மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ளார் என்றும் எனவே, இம்மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

4. இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. இந்த மனுவில் எழுகின்ற பிரச்சனை யாதெனில் இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**6. தீர்வு:**

6.1. மனுச்சொத்தான அருள்மிக மாமூண்டி திருக்கோவிலுக்கு சுற்றுச்சுவர் அமைப்பதையும் மற்றும் அதன் கட்டுமானப்பணிகளையும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளோ, அவரதுவகை ஆட்களோ, ஏஜெண்டுகளோ எந்தவித தடையும், இடைஞ்சலும் செய்யக்கூடாதென்றும், மேற்படி அசல் வழக்கு முடியும் வரை எதிர்மனுதாரருக்கு எதிராக இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6.2. மனுதாரர் தரப்பில், மாமூண்டி கோவிலுக்கு பாத்தியப்பட்ட மனுச்

சொத்தின் தெற்கு பக்கத்தில் இந்த எதிர்மனுதாரர்கள் கும்பிட்டுவரும் அவர்களுடைய குலதெய்வமான ஊமக்காளி கோவில் அமைந்துள்ளது என்றும், மனுதாரரும் அவரது பங்காளிகள் சேர்ந்து கும்பிட்டு வரும் கோவிலானது சுமார் 100 வருடங்களுக்கு முன்பிருந்தே மனுதாரர்களின் முன்னோர்களால் கும்பிட்டு வந்து மேற்படி கோவிலின் உரிமை இந்த 27 பங்காளிகளுக்கு மட்டுமே பாத்தியப்பட்டதாகும் என்றும், மனுச் சொத்தின் அருகில் தெற்குப் பக்கம் அமைந்துள்ள இந்த எதிர்மனுதாரர்களுக்கும், அவரது பங்காளிகளுக்கும் பாத்தியப்பட்ட ஊமக்காளி கோவில் தற்போது புதிதாக கோவில் கட்ட கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்றும், மனுதாரருடைய பங்காளிகளுக்கு பாத்தியப்பட்ட மாமூண்டி திருக்கோவிலை சுற்றி காம்பவுண்டு சுவர் அமைப்பதில் தான் பிரச்சனை ஏற்பட்டுவருகிறது என்றும், மனுதாரர் அவரது குடும்ப குலதெய்வத்திற்கு பாத்தியப்பட்ட பட்டா இடத்தில் தான் காம்பவுண்டு சுவர் எழுப்ப அதற்கான நடவடிக்கை எடுத்து வருகிறார் என்றும், இதில் எதிர்மனுதாரர்கள் ஆட்சேபணை செய்ய யாதொரு ஆட்சேபணையும் இருக்கமுடியாது என்றும், ஏனென்றால் மனுதாரருடைய குலதெய்வதம் வேறு என்றும் எதிர்மனுதாரர்களின் குலதெய்வம் வேறு என்றும், மேற்படி இரு கோவில் இடத்திற்கும் தனித்தனியே பட்டா இருந்து வருகிறது என்றும் சென்ற 05.09.2023 ஆம் தேதி மனுதாரரும், அவரது பங்காளிகளும் சேர்ந்து கோவில் சுற்றுச்சுவர் அமைப்பதற்காக செங்கள்கல் இறக்குவதற்காக கோவில் வாசல் முன்பு வந்திருந்தபோது இந்த எதிர்மனுதாரர்கள் அனைவரும் ஒன்றுகூடி சுற்றுச் சுவர் கட்டக்கூடாது என்றும், அதற்கான எந்தவித தளவாடச்சாமான்களும்

இறக்கக்கூடாது என்று ஆட்சேபணை செய்து பிரச்சனை செய்துவந்தார்கள் என்றும், எனவே, அசல் வழக்கு முடியும் வரை எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

6.3. எதிர்மனுதாரர் தரப்பில், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் சேர்ந்து வழக்கு நத்தம் புறம்போக்கு இடத்தில் ஊமக்காளி கோவில் மற்றும் மாமூண்டி கோவில் ஆகியவற்றை 100 வருடங்களுடக்கு முன்பிருந்தே வழிபட்டு வந்துள்ளார்கள் என்றும், மேற்படி இரண்டு கோவில்கள் இருப்பதை மறைத்தும் மற்றும் ஆக்கிரமிப்பு செய்ய வேண்டும் என்ற கெட்ட உள்நோக்கத்துடனும், மேற்படி மனுவை இந்த மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ளார் என்றும் எனவே, இம்மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

6.4. இம்மனுவில் முதலில், தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க, முதல் தோற்ற வழக்கு **(Prima facie Case)** உள்ளதா? என்பதையும், வசதியின் சமநிலை **(Balance of convenience)** உள்ளதா? என்பதையும், தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்காதபட்சத்தில் மனுதாரருக்கு ஈடு செய்ய இயலாத இழப்பு **(Irrepairable loss)** ஏற்பட வாய்ப்பு உள்ளதா? என்பதையும் முடிவு செய்ய வேண்டியதுள்ளது.

6.5. இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனு, எதிருரை, ஆவணங்கள் மற்றும் வழக்குக் கோப்புகளை பரிசீலனை செய்ததில், அசல் வழக்கானது வழக்குச் சொத்தான வாதிக்கும் அவருடன் சேர்ந்த 27 பங்காளிகள் குடும்பங்களுக்கும் மாமூண்டி திருக்கோவில் பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் கோரியும், வழக்குச் சொத்தான மாமூண்டி

திருக்கோவிலுக்கு சுற்றுச் சுவர் அமைப்பதையும் மற்றும் அதன் கட்டுமான பணிகளையும் பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ எவ்வித தடையும் இடைஞ்சலும் செய்யக்கூடாது என பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6.6. மனுச் சொத்தில் அமைந்துள்ள மாமூண்டி திருக்கோவில் மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டுள்ளது என்றும், மனுச் சொத்தின் அருகில் தெற்குப் பக்கம் அமைந்துள்ள இந்த எதிர்மனுதாரர்களுக்கும், அவரது பங்காளிகளுக்கும் பாத்தியப்பட்ட ஊமக்காளி கோவில் அமைந்துள்ளது என்றும், மனுதாரருடைய குலதெய்வதம் வேறு என்றும் எதிர்மனுதாரர்களின் குலதெய்வம் வேறு என்றும், மேற்படி இரு கோவில் இடத்திற்கும் தனித்தனியே பட்டா இருந்து வருகிறது என்றும் மனுதாரர் தரப்பில் வாதம் முன்வைக்கப்பட்டது. இந்நிலையில் எதிர்மனுதாரரர்கள் எதிருரையில் மேற்படி சங்கதிகளை குறிப்பிட்டு மறுக்கவில்லை. மேலும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி வாதத்தை மறுத்து எவ்வித சாட்சிய சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை. எனவே, மனுதாரர் முதல் தோற்ற வழக்கு **(Prima facie Case)** உள்ளது என்பதையும், மனுதாரர் தரப்பில் சமநிலை வாய்ப்பும் **(Balance of convenience)** உள்ளது என்பதையும், தற்காலிக உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வழங்காதபட்சத்தில் மனுதாரருக்கு ஈடு செய்ய இயலாத இழப்பு **(Irrepairable loss)** ஏற்பட வாய்ப்பு உள்ளது என்பதையும், மனுதாரர் தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

7. இறுதியாக, அசல் வழக்கு முடியும் வரை மனுச் சொத்தான அருள்மிகு மாமூண்டி திருக்கோவிலுக்கு சுற்றுச் சுவர் அமைப்பையும் மற்றும் அதன்

கட்டுமானப்பணிகளையும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளோ, அவரது வகை ஆட்களோ, ஏஜெண்டுகளோ எந்தவித தடையும், இடைஞ்சலும் செய்யக்கூடாதென இடைக்கால உறுத்துக்கட்டளை பிறப்பித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2025 ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 8 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

**ஒம்/-சு.அபூர்வா,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**பழனி.**

**மனுதாரர் தரப்பு சாட்சியங்கள் :** இல்லை

**மனுதாரர் தரப்புசான்றாவணங்கள் :** இல்லை.

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சியங்கள் :** இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் :** இல்லை.

**ஒம்/-சு.அபூர்வா,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**பழனி.**

Date:08.09.2025